OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாக காணப்படும் கீழ்வரும் பதவிகளுக்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### (01) மேற்பார்வையாளர் (மின்சாரப் பிரிவு) இரண்டாம் நிலை [U-MN 2(II)]

தகைமைகள் :- 1. தொழில்நுட்ப அறிவியலில் தேசியப் பட்டயச் சான்றிதழ் அல்லது அதற்கு இணையாக தகுதி மற்றும் அத்தகுதியைப் பெற்ற பின்னர் அதனுடன் தொடர்புடைய துறையில் 4 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

குறிப்பு :- மேற்குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப அறிவியல் தேசியப் பட்டய படிப்பிற்கான 4 வருட பயிற்சிக்காலம் விண்ணப்பிப்பதற்கு போதாது.

அல்லது

2. தேசிய தொழிநுட்பச் சான்றிதழ் அல்லது அதற்கு இணையான தகுதியுடன் தொடர்புபட்ட துறையில் 10 ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

சம்பள அளவு :- ரூபா. 61,275 – 18 X 890 – 77,295 (மாதாந்தம்) [U – MN 2 (II)]
ஆட்சேர்ப்பு :- நேர்காணல் மூலம்

### (02) தொழிநுட்ப அதிகாரி (ஒலியொளி) தரம் [U-MT 1(III)]

தகைமைகள் :- (i) க.பொ.த (உ.த) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) (அ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று அல்லது பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு/ மின்னணுவியல/ பல் ஊடக அல்லது ஆடியோ வீடியோ நுட்பங்கள் ஆகிய துறைகளில் தேசிய தொழிற்பயிற்சி தகைமையின் 5ஆம (NVQ Level 5) மட்டத்திற்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

சம்பள அளவு :- ரூபா. 51,095 - 7 X 540: 10X640 - 61,275 (மாதாந்தம) [U-MT 1(III)]
ஆட்சேர்ப்பு :- பிரயோக பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### (03) பொது சுகாதார பரிசோதகர் தரம III [U-MT 1(III)]

தகைமைகள் :- சுகாதார திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

சம்பள அளவு :- ரூபா. 51,095 - 7 X 540 : 10X640 - 61,275 (மாதாந்தம்) [U-MT 1(III)]

ஆட்சேர்ப்பு : நேர்முகப் பரீட்சை மூலம்

### (04) கைவினை செயல்விளக்குனர் (மின்சாரம்) தரம் II [U-MN 1(III)]

தகைமைகள் :- 1. உரிய துறையில் அனுபவம்பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

2. பல்கலைக்கழகம் / அரச சேவை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் திறமையான கைவினைஞராக குறைந்தபட்சம் பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

3. பல்கலைக்கழகம் / அரச சேவை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் திறமையான சிறப்புத் தர பதவியில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு :- ரூபா. 49,475 – 17 x 540 – 58,655 (மாதாந்தம்) [U-MN 1(III)]

ஆட்சேர்ப்பு முறை :- செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வு

### (05) புத்தகம் கட்டுநர (தரம் III) [U-PL 3(III)]
### (06) இரும்பு பொருத்தனர் (தரம் III) [U-PL 3(III)]

மேற்குறிப்பிட்ட இல 05 மற்றும் 06 பதவிகளுக்காக

தகைமைகள் :- மேற்கூறப்பட்ட ஒவ்வொரு பதவிகளுக்கு உரிய மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 4ஆம் மட்டத்திற்கு குறையாத சான்றிதழைப் பெற்றிருத்தல். (கற்கைநெறிக்குரிய தேசிய தொழில்சார் தகைமையை (NVQ Level) உறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் சமனான சான்றிதழை (Certification of Equivalence) சமர்ப்பித்தல் வேண்டும்.

சம்பள அளவு :- ரூபா. 48,005 – 16 x 490 – 55,845 (மாதாந்தம்) [U-PL 3(III)]

ஆட்சேர்ப்பு :- பிரயோக பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### (07) விடுதி பொறுப்பாளர் மற்றும் சமையற்காரர் (தரம் III) [U-PL 2(III)]

தகைமைகள் :- 1. க.பொ.த (சா.தா) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் பதவிக்கு பொருத்தமான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 2 அல்லது 3 மட்டத்திற்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல். (கற்கைநெறிக்குரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level) உறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் சமனான சான்றிதழ் (Certification of Equivalence) சமர்ப்பித்தல் வேண்டும்.

அல்லது

2. க.பொ.த (சா.தா) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் உரிய துறையில் தொழிற் தகைமையுடன் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

சம்பள அளவு :- ரூபா. 44,575 – 16 x 490 – 52,415 (மாதாந்தம்) [U-PL 2(III)]

ஆட்சேர்ப்பு : தொழில்சார் பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

வயது : வயது 18 இற்கு குறையாமலும் **45 இற்கு மேற்படாதவாறும்** இருத்தல் வேண்டும்.

இப்பதவிகளுக்கு அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் https;//ou.ac.lk எனும் பல்கலைக்கழக வலைத்தலத்திள் (https;//ou.ac.lk/staff-resources/ இல் Establishment Division இன் கீழ் காணப்படும் Application Non-academic) அல்லது இப்பழ்கலைக்கழகத்தின் கல்விசாரா தாபனப் பிரிவிற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்விசாரா தாபனப்பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவலை, நுகேகொட எனும் முகவரியில் **2026.06.05 ஆம் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

அரச, அரச கூட்டுத்தாபன, வரையறுக்கப்பட்ட சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். **கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.**

**தேவையான தகவல்களை குறிப்பிடாமல் விடுதல், தெளிவற்றதாக இருத்தல், சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காமல் இருத்தல், விண்ணப்பங்கள் உரிய திகதிக்குப் பின்னர் கிடைத்தல் அல்லது வேறு ஏதேனும் தேவைப்பாட்டை நிறைவேற்றாமல் இருத்தல் விண்ணப்பங்களை நிராகரிக்க காரணமாக அமையும்.** எந்தவொரு விண்ணப்பப்பத்திரமும் நிராகரிக்கப்பட்டதற்குப் பின்னர் எந்தவொரு காரணத்திற்காகவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.விண்ணப்பதாரர்களின் இறுதிக் குறுந்தேர்வுப் பட்டியலைத் தயாரிக்கும் உரிமை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினைச் சார்ந்ததாகும்.

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவலை, நுகேகொடை
17.05.2026

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL